**மத்திய கலாசார நிதியம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

மத்திய கலாசார நிதியத்தின் (நிதியம்) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

### 1.2 அபிப்பிராயத்தினை மறுப்பதற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நான் நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக கால வரையறைகளினுள்ளே தொடர்புடைய சட்ட திட்டங்களிற்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்தியுள்ளா என்பதும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 பிரகாரம், நிறுவனத்தின் ஊழியர் நலன்புரிப் பொறுப்புக்களைக் கணக்கிடும் போது காப்பீட்டுக் கணிப்பு முறையைப் பயன்படுத்த வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 730,392,632 பெறுமதியான பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகளைக் கணக்கிடும் போது இக்காப்பீட்டுக் கணிப்பு முறை பயன்படுத்தப்படவில்லை. | 2024 ஆம் ஆண்டில் காப்பீட்டுக் கணிப்பு முறையைப் பயன்படுத்தி ஊழியர் நலன்புரிப் நலன்கள் கணக்கிடப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கணக்குகளில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப கணக்கீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை சொத்துக்களையும் நடைமுறை பொறுப்புக்களையும் ஒன்றுக்கொன்று ஈடுசெய்ய முடியாத போதிலும், மீளாய்வாண்டில் ஒரு நபருக்குரிய ரூபா 2,442,405 ஆன கடன்பட்டோர் நிலுவையானது, அதே நபருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 413,109 கடன் கொடுநர் நிலுவையுடன் ஈடுசெய்யப்பட்ட பின்னர், எஞ்சிய ரூபா 2,029,296 ஆன கடன்பட்டோர் நிலுவையாக நிதி கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. | கடன்பட்டோர் நிலுவைகளுக்கு எதிராகக் கடன் கொடுநர் நிலுவைகளை ஈடுசெய்த கணக்கியல் பிழையானது, 2025 ஆம் ஆண்டிலிருந்து திருத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டிற்கான பெற வேண்டிய வட்டி கணக்கிடப்படாததால், பெற வேண்டிய வட்டிக் கணக்கு ரூ. 916,438 இனால் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | தற்போது பெற வேண்டிய வட்டி சரியாகக் கணக்கிடப்பட்டு கணக்குகளில் பதியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | வருடத்திற்குரிய வருமானம் சரியாகக் கணக்குகளில் பதியப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வு கட்டணங்கள் ரூ. 504,450 ஆக குறைவாக நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தமை, மீளாய்வாண்டிலும் சீராக்கம் செய்யப்படவில்லை. | இது தொடர்பாகப் பரிசோதித்து, தற்போதைய கணக்குகளின் ஊடாகத் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | வருடத்திற்குரிய செலவீனங்கள் சரியாகக் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூ. 487,445,757 ஆக இருந்த போதிலும், நிதிச் செயலாற்றல் அறிக்கையில் அது ரூ. 488,449,366 எனக் காண்பிக்கப்பட்டுள்ளமையின் காரணமாக, ஆண்டின் வட்டி வருமானம் ரூ. 1,003,609 இனால் அதிகமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. | 2020 ஆம் ஆண்டில் ரூபாய் மற்றும் டொலர் நிலையான வைப்புக்களுக்குரிய வட்டி வருமானம் அதிகமாகக் கணக்கிடப்பட்ட பிழையை மேலும் பரிசோதித்து, தற்போதைய கணக்குகளில் சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | வருடத்திற்குரிய வருமானப் பெறுமதி சரியாகக் கணக்குகளில் பதியப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | விடயம் | தொகை ரூபா | இல்லாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் கீழ் 10 விசேட நிதிய செயற்திட்டங்கள் மீதி | 8,786,148 | அட்டவணைகள், புத்தகங்கள் மற்றும் கோவைகள் | 2021 இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த தகவல்கள் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | புத்தகங்கள், கோவைகள், அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| | 05 வெளிநாட்டு நிதி செயற்திட்டங்கள் மீதி | 4,757,900 | | | |
| (ஆ) | முதலீட்டு வருமானம் பெற வேண்டிய ரூபா நிலையான வைப்பு வட்டி | 545,988,781<br>346,753,011 | நிலையான வைப்பு ஆவணங்கள், நிலையான வைப்புச் சான்றிதழ்கள், புதுப்பித்தல் அறிவித்தல்கள், கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் தொடர்பான அட்டவணைகள் | வங்கி மீதி உறுதிப்படுத்தல்களை நேரடியாகக் கணக்காய்வுப் பிரிவுக்கு அனுப்புமாறு வங்கிக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய எழுத்துமூல உறுதிப்படுத்தல்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| | பெற வேண்டிய டொலர் நிலையான வைப்பு வட்டி பெறுமதி | 34,789,220 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | நடைமுறையிலுள்ள வேலை | 176,008,737 | மதிப்பிடப்பட்ட தொகை, சான்றளிக்கப்பட்ட வேலைப் பெறுமதி மற்றும் ஒவ்வொரு வருடங்களிலும் நடைமுறையிலுள்ள வேலைக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்ட அளவு ஆகியவற்றை உள்ளடக்கிய அட்டவணைகள் | ஒவ்வொரு பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட தொகை, சான்றளிக்கப்பட்ட வேலைப் பெறுமதி எவ்வளவு மற்றும் ஒவ்வொரு பணி தொடர்பாகவும் அந்த வருடத்தில் நடைமுறையிலுள்ள வேலைக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்ட அளவு எவ்வளவு என்பது போன்ற விரிவான தகவல்களை உள்ளடக்கித் தயாரிக்கப்படும் அறிக்கை இதுவரை தயார் செய்யப்படவில்லை எனவும், அது விரைவில் தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | விரிவான அட்டவணைகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இறுதி இருப்பு மீதி | 150,200,943 | இருப்பு ஆவணங்கள், இருப்பு மதிப்பீட்டுத்தாள்கள் , இருப்பு ஆய்வு அறிக்கைகள் | 2020.12.31 இல் உள்ளவாறு இருப்பு மீதி தொடர்பான பொழிப்பு அறிக்கை, 2020 ஆம் ஆண்டின் இறுதி கணக்கறிக்கையின் 23 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | மீதியை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய மீதி | 25,169,515 | செலுத்த வேண்டிய மீதி என்பதை உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் | 2013 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையிலுள்ள ஒரு மீதியாகும். இது தொடர்பான விரிவான தகவல்களைக் கண்டறிவதில் சிரமம் உள்ளதால், இது குறித்து விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உள்ளக கணக்காய்வுப் பிரிவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய மீதி என்பதை உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | நிலையான சொத்துகள்<br><br>பிற்போடப்பட்ட மிகை கட்டணம் | 21,000,000<br><br>1,050,000 | பிற்போடப்பட்ட மிகை கட்டணத்திற்குரிய நிலையான சொத்துக்கள் அட்டவணை | பிற்போடப்பட்ட மிகை கட்டணம் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட ஆவணமொன்று அட்டவணைப் புத்தகத்தின் 43-48 ஆம் | பிற்போடப்பட்ட மிகை கட்டணத்திற்கு உரிய கட்டடங்கள் எவை என்பதைக் காட்டும் வகையில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பக்கங்களின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (எ) | ஒப்பந்த நிறுத்தி வைத்தல்கள்<br><br>மீள செலுத்த வேண்டிய டென்டர் வைப்புக்கள்<br><br>அனுமதி பத்திரங்கள் விற்பனை முற்பணம் | 12,594,892<br><br>9,205,208<br><br>52,881,696 | அட்டவணைகள் | எதிர்வரும் ஆண்டுகளில் இருந்து கணக்குகளுடன் விரிவான அட்டவணைகளை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தத் நிறுத்தி வைத்தல்கள் பெறுமதியின் துல்லியம் உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஒப்பந்த உடன்படிக்கைகள் மற்றும் கொடுப்பனவுச் சான்றிதழ் நிபந்தனைகள் உள்ளடங்கும் விரிவான அட்டவணைகளும் ஏனைய வைப்புகளுக்குரிய அட்டவணைகளும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | ஏனைய வருமானங்கள் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள வாடகை வருமானம்<br><br>ஏனைய வருமானம் | 10,052,991<br><br>1,347,086 | வருமான ஆணங்கள், அட்டவணைகள் | அனுராதபுரம், பொலன்னறுவை, கதிர்காமம் ஆகிய பிரதேசங்களிலுள்ள சுற்றுலா விடுதிகளின் வாடகை மூலம் ஈட்டப்பட்ட வருமானம், அக்காலப்பகுதியில் மத்திய கலாசார நிதியத்தின் கீழ் இருந்த அபேகம வளாகத்திலுள்ள மண்டபங்களின் வாடகை மூலம் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக அறவிடப்பட்ட பெறுமதிகளை உள்ளடக்கிய வருமானம் ஆகியன இதில் அடங்கும். இது தொடர்பான பொதுப் பேரேட்டுக் கணக்கின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வுக்குப் போதுமான வகையில் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஐ) | நிலையான வைப்பு முதலீடு | 6,465,740,201 | நிலையான வைப்பு ஆவணங்கள், நிலையான வைப்பு மூலப்பிரதி | வங்கி மீதி உறுதிப்படுத்தல்களை நேரடியாகக் கணக்காய்வுப் பிரிவுக்கு அனுப்புமாறு வங்கிக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூலச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஒ) | அனுமதிச்சீட்டு வருமானத்திலிருந்து குறைத்து காண்பிக்கப்பட்டிருந்த போனஸ் அனுமதிச்சீட்டு வருமானம்<br><br>மீண்டும் பணம் மீள செலுத்திய அனுமதிச்சீட்டு வருமானம் | 6,099,730<br><br>667,674 | அனுமதிச்சீட்டுக்களின் குறியீட்டு எண்களை உள்ளடக்கிய விரிவான அட்டவணைகள் | 2020 ஆம் ஆண்டிற்குரிய வழங்கப்பட்ட போனஸ் அனுமதிச்சீட்டுக்களின் எண்ணிக்கை தொடர்பான சுருக்கம் இறுதி கணக்கறிக்கையின் 32 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | விரிவான அட்டவணைகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டினுள் ஐயக்கடன் ஒதுக்கு மீதி | 3,396,573 | கணக்கிடப்பட்ட முறை தொடர்பான தகவல்கள் | 2012 ஆம் ஆண்டிலிருந்து ஒதுக்கப்பட்ட ஐயக்கடன் மீதிகள் இந்த மீதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, இந்த மீதிகளைத் துல்லியமாக இனங்காண்பதற்குப் போதுமான தகவல்களைக் கண்டறிவதில் சிரமம் உள்ளதுடன், இது குறித்து மேலதிகமாகப் பரிசீலித்து, உரிய கணக்கீட்டுத் திருத்தங்களை எதிர்காலத்தில் மேற்கொள்ள முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஐயக்கடன்களைக் கணக்கிடுவதற்குரிய தகவல்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஔ) | நானாவித கடன் பட்டோர் மீதி | 2,029,296 | கடன் பட்டோர் பதிவேடு, விரிவான அட்டவணைகள் | இந்த மீதி தொடர்பான விரிவான அட்டவணையைத் தயாரிப்பதற்குப் போதுமான தகவல்களைக் கண்டறிவதில் சிரமம் நிலவுகிறது. இந்த மீதிக்குள் 2010 ஆம் ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலுவையிலுள்ள கடன் பட்டோர் மீதிகள் காணப்படுவதுடன், அந்தத் தகவல்களை | மீதியை உறுதிப்படுத்துவதற்குரிய எழுத்துமூல உறுதிப்படுத்தல்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உள்ளடக்கிய கோப்புகளை தற்போது கண்டறிவது கடினமாக உள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (க) | நீண்டகாலமாகப் பெறவேண்டிய மீதிகளின் கீழ் காட்டப்பட்டுள்ள, 04 வருடங்களாக நிலுவையிலுள்ள Challenger Lanka கணக்கின் மீதி மற்றும் Court Deposit மீதி | 1,382,054<br>44,533 | விரிவான அட்டவணைகள் | Court Deposit ஆக காட்டப்பட்டுள்ள மீதி மிக நீண்டகாலமாக உள்ள ஒரு மீதியாகும் என்பதுடன், அது தொடர்பான விரிவான தகவல்களைத் தற்போது கண்டறிவதில் சிரமம் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | மீதிகளை உறுதிப்படுத்துவதற் குரிய எழுத்துமூல உறுதிப்படுத்தல்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (கா) | நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் செலுத்த வேண்டிய மீதிகளாகக் காட்டப்பட்டுள்ள இரத்து செய்யப்பட்ட காசோலைகளின் பெறுமதி<br><br>கட்டுமான நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய பெறுமதி | 224,700<br><br>75,296,799 | அட்டவணைகள் | இரத்து செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பான ரூ. 224,700 குறித்துப் பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். கட்டுமான நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய ஒப்பந்த ஆவணங்கள் மற்றும் அவை தொடர்பான கோப்புகளைக் கணக்காய்வுக்குத் தேவைப்படின் சமர்ப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வுக்குப் போதுமான வகையில் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 முற்பணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தின் கீழ் காணப்படுகின்ற செயற்திட்டங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற பணிகளைச் செயல்படுத்துவதற்காக, நிதியத்தின் உத்தியோகத்தர்களால் வெளித்தரப்பினர் மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த முற்பணம் ரூ. 546,307,765 ஆகும். இதில் ரூ. 16,237,849 ஆனது 5 ஆண்டுகளைக் கடந்திருந்ததுடன், இந்த நிலுவைகளைத் தீர்ப்பதற்கு நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், இந்த நிலுவைகளின் தற்போதைய நிலை குறித்த தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ரூ. 546,307,765 தொகையில் ரூ. 436,267,817 ஆனது 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சிசுதஹம் செவண செயற்திட்டத்தின் கீழ் தஹம் பாடசாலைகள் மற்றும் விகாரைகளைப் புனரமைப்பதற்காகச் செலுத்தப்பட்டதுடன், இதில் ஒரு பகுதி தற்போது தீர்க்கப்பட்டுள்ளது. 05 ஆண்டுகளைக் கடந்த கடன் நிலுவைகள் குறித்து ஆராய்ந்து, அந்த முற்பணங்களைத் தீர்ப்பதற்குத் தேவையான மேலதிக நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | தீர்க்கப்படாத முற்பணங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| நிதி பிரமாணம் 316 | பணம், முத்திரைகள், நுழைவுச்சீட்டுகள் போன்ற நிதி பெறுமதி கொண்ட பொருட்கள், அதற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட பாதுகாப்பகம், பெட்டகம், பாதுகாப்பு அறை அல்லது வேறொரு பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், அச்சுக்கூடத்தின் அச்சுப் பணிகள் முடிவடைந்த பின்னர் தற்காலிகமாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நுழைவுச்சீட்டுகள் மற்றும் நிதியத்தின் பிரதான களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள அச்சிடப்பட்ட நுழைவுச்சீட்டுகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதான அலுவலகத்தில் போதிய வசதிகள் இல்லாத காரணத்தினால், அச்சிடப்பட்ட நுழைவுச்சீட்டுகள் பிரதான அலுவலக களஞ்சியசாலையிலேயே பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் பிரதான அலுவலகத்தை இடவசதி கொண்ட இடமாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதால், அதன்போது பிரதான அலுவலக களஞ்சியசாலைக்கு அதிக பாதுகாப்பான இடமொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அச்சிடப்பட்ட நுழைவுச்சீட்டுகளை மிகவும் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்துவதற்குத் தேவையான இடவசதிகளை ஏற்படுத்திக்கொள்ள இதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பெறுமதியைக் கொண்ட பொருட்கள் நிதி பிரமாணம் பிரகாரம் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 227,868,487 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 126,746,674 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 101,121,813 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு நுழைவுச் சீட்டுக்கள் வருமானம், மாதிரிகள் விற்பனை, வெளியீட்டு வருமானம் மற்றும் அச்சிடல் வருமானம் முறையே ரூபா 2,487,833,071, ரூபா 6,518,074, ரூபா 1,658,574 மற்றும் ரூபா 5,737,164 இனால் குறைவடைந்தமையும் நிதிச் செலவினம் மற்றும் பணிக்கொடை செலவினம் ரூபா 19,897,272 மற்றும் ரூபா 56,636,505 இனால் அதிகரித்தமையும் பிரதான காரணங்களாக இருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பலவீனமான பாறையினால் செதுக்கப்பட்டிருந்ததாலும், வெயில் மற்றும் மழையினால் பௌதிக மற்றும் இரசாயனச் சிதைவுக்கு உள்ளாகியிருந்ததாலும் மிகவும் நலிவடைந்த நிலையிலிருந்த சயன நிலை புத்தர் சிலைக்கு கூரையொன்றை அமைப்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறு கலாசார அமைச்சு மத்திய கலாசார நிதியத்திற்கு அறிவுறுத்தியிருந்தது. தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டதன் பின்னர், 2019 நவம்பர் 04 ஆம் திகதியன்று சயன நிலை புத்தர் சிலைக்கு கூரை அமைப்பதற்கான ஒப்பந்தமானது, பெறுகை செயல்முறையின் பின்னர் முறையான எழுத்துமூல உடன்படிக்கையின்றி ரூ. 1,941,433 பெறுமதிக்கு 150 நாட்களுக்குள் நிறைவு செய்வதற்காக கட்டுமான நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2025 ஏப்ரல் 21 ஆம் திகதி வரை ரூ. 874,019 பெறுமதியான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் கட்டுமானப் பணிகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 5 1/2 ஆண்டுகள் கடந்தும் கட்டுமானத்தை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இதற்காக 2024 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டத்தின் மூலம் ரூ. 4,000,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை உரிய பணிகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை கையெழுத்திடப்படுவதற்கு முன்னர் பணித்தளப் பணிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், உடன்படிக்கை கையெழுத்திடுவது மேலும் தாமதமானதால் இதில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகளைச் செய்ய முடியாமல் போயுள்ளது. எவ்வாறாயினும், இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு மத்திய கலாசார நிதியத்தினால் மீண்டும் முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தச் சிலையின் சிதைவைத் தவிர்ப்பதற்காக இந்தக் கூரை அமைக்கப்பட வேண்டியுள்ளதால், இது தொடர்பாக கட்டுமானத் துறை சார்ந்த நிறுவனத்திடமிருந்து (ICTAD) ஆலோசனைகள் பெறப்பட்டதுடன், அந்த ஆலோசனைகளுக்கமைய புதிய உடன்படிக்கையொன்றில் கையெழுத்திடுவதற்குத் தற்போதைய பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் பெறுவதற்காகக் கட்டுப்பாட்டு சபைப் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பின்னர், பழைய ஒப்பந்தத்தின் கீழ் நிறைவு செய்யப்பட்ட பணிகளுக்கான கொடுப்பனவுகளைச் செய்து, அந்த ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, புதிய ஒப்பந்தக்காரர் ஒருவரைத் தெரிவு செய்து பணிகளை முன்னெடுப்பதற்குப் கட்டுப்பாட்டு சபையின் அனுமதியைப் பெறுவதற்கான பத்திரமும் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து பழைய கொடுப்பனவுகளைச் செய்த பின்னர் இந்தப் பணியை முன்னெடுக்க எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | தற்போதுள்ள பிரச்சினைகளைத் தாமதமின்றித் தீர்த்து, உரிய பணிகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஸ்ரீ தலதா மாளிகைக்கு அருகில் அமைந்துள்ள நிதியத்திற்குச் சொந்தமான சர்வதேச தகவல் மையக் கட்டிடம், ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளரின் PS/DSP/RAV/01/10/KP ஆம் இலக்க 2017 யூலை 14 திகதிய கோரிக்கைக்கு இணங்க, 2017 யூலை 23 | இதுவரை பல சந்தர்ப்பங்களில் வாய்மூலமாகவும் எழுத்துமூலமாகவும் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், பத்தினி தேவாலயத்தினால் இந்த கட்டிடம் எம்மிடம் விடுவிக்கப்படவில்லை. அத்துடன் தளபாடங்கள் உள்ளிட்டவையும் இக்கட்டிடத்துடன் சேர்த்து பூட்டப்பட்டு பத்தினி | கட்டிடத்தை விடுவித்துக்கொண்டு, உரிய சமூகப் பணிகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதல் 2017 ஆகஸ்ட் 16 வரையான காலப்பகுதிக்கு கண்டி ஸ்ரீ பத்தினி தேவாலயத்தின் தேவைகளுக்காக ஒப்படைக்கப்பட்டிருந்தது. இக்கட்டிடத்தை மீண்டும் நிதியத்தின் பொறுப்பில் எடுப்பதற்கு 2025 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால், இம்மையத்தின் ஊடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச தகவல் வழங்குதல், இலவச ஒலி-ஒளி நிகழ்ச்சிகளை நடத்துதல், கலாசாரம் சார்ந்த புத்தகங்கள் மற்றும் மாதிரிகளை விற்பனை செய்தல், இலங்கை கலாசாரம் மற்றும் மரபுரிமை சார்ந்த கல்வித் திட்டங்களை நடத்துதல் ஆகிய சேவைகளை கடந்த 07 ஆண்டுகளாக வழங்க முடியாமல் போயுள்ளது.<br>மேலும், தகவல் மையக் கட்டிடத்திலுள்ள நிதியத்திற்குச் சொந்தமான 05 மில்லியன் ரூபாவிற்கும் அதிக பெறுமதியுடைய சொத்துக்களும் எவ்வித பயன்பாடும் இன்றி குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டன. | தேவாலயத்தினால் வலுக்கட்டாயமாகத் தக்கவைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக, இக்கட்டிடத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட சமூகப் பணிகளை நிறைவேற்ற முடியாமல் போயுள்ளது. 2025 மே 17 ஆம் திகதி நடைபெற்ற நிர்வாகக் சபைக் கூட்டத்தில் இது குறித்து விரிவாக ஆராயப்பட்டது. இதன்போது, தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் இதில் தலையிட்டு, இக்கட்டிடத்தை பொறுப்பேற்று மீண்டும் மத்திய கலாசார நிதியத்திடம் ஒப்படைப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார். அதற்கமைய, தொல்பொருள் திணைக்களத்திடம் இது தொடர்பாக எழுத்துமூலக் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | நெல்லிகல பௌத்த மையத்தின் ஓய்வறையை நிர்மாணிக்கும் பணிகள், மத்திய கலாசார நிதியத்தினால் பொருட்களுக்காக ரூ. 43,942,030 செலவிடப்பட்டும், இலங்கை இராணுவத்தின் மனிதவளத்தைப் பெற்றுக்கொண்டும் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஓய்வறை நிர்மாணப் பணிகளில் 40 சதவீத முன்னேற்றம் காணப்பட்ட நிலையில், 2020 ஆம் ஆண்டில் பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2025 பெப்ரவரி 06 ஆம் திகதி வரை சுமார் 05 ஆண்டுகள் கடந்த போதிலும், அந்த ஓய்வறையின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படவில்லை. இதன் காரணமாக, கட்டமைப்பு சட்டகத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட இரும்புக்கம்பிகள் மழைநீரில் நனைந்து துருப்பிடித்துள்ளதால், கட்டிடத்தின் உறுதித்தன்மை குறித்து அவதான நிலை ஏற்பட்டுள்ளமையும், எதிர்கால கட்டுமானப் பணிகளின் போது இதற்காக மேலதிக செலவுகளை ஏற்க வேண்டியிருக்கும் என்பதும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | கண்டி செயற்திட்டத்தின் ஊடாக, குறித்த பௌத்த மையத்தின் நிர்மாணப் பணிகளுக்காகப் 2020 ஆம் ஆண்டில் பொருட்களை வழங்குவது தொடர்பாகத் பிரதான அலுவலகத்தினால் எடுக்கப்பட்ட கொள்கை தீர்மானத்தின் பிரகாரம், இலங்கை இராணுவம் மற்றும் கடற்படையின் மனிதவள பங்களிப்புடன் முதலாம் மாடியின் கொன்கிரீட் தளம் வரை கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. நிறுவனத்தின் நிதி நிலைமை வீழ்ச்சியடைந்தமையால், நிறுவனத்தின் நிலைத்தன்மையைக் கருத்திற்கொண்டு மத்திய கலாசார நிதியத்தின் அனைத்துத் திட்டங்களின் கட்டுமானப் பணிகளையும் தற்காலிகமாக நிறுத்துவதற்கு நிர்வாக சபை தீர்மானித்தது. அதற்கமைய, இதன் பணிகளும் நிறுத்தப்பட வேண்டியிருந்தது. கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்ட பின்னர், வளிமண்டலத்திற்குத் திறந்த நிலையில் காணப்பட்ட இரும்புக்கம்பிகளுக்கு துருப்பிடிப்பைத் தடுக்கும் வர்ணங்களை பூசி அவற்றைப் பாதுகாப்பதற்கு உரிய நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டுமானங்களின் கட்டமைப்பு உறுதித்தன்மைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள திட்டங்கள் குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக நிர்வாக சபையினால் தாமதமின்றி தீர்மானமொன்று எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியினால் திருத்தப்பட்ட நிதி ஒழுங்குவிதி 877(2) (ஈ) இன் பிரகாரம், கணக்காய்வு ஆண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதியம் தொடர்பான நிதி அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், சுமார் 04 ஆண்டுகள் 6 மாத கால தாமதத்தின் பின்னர், 2020 ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கைகள் 2025 யூலை 07 ஆம் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அத்துடன், வரைவுச் செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிலிருந்து நிதி அறிக்கைகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, தொடர்ச்சியான காலதாமதங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி, கணக்காய்வு ஆண்டு முடிவடைந்து 2 மாதங்கள் கடப்பதற்கு முன்னதாக நிதி அறிக்கைகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க வேண்டும். |

### 4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியினால் திருத்தப்பட்ட நிதி ஒழுங்குவிதி 877(2) (உ) இன் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையையும் உள்ளடக்கிய வருடாந்த செயலாற்றல் அறிக்கையை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் (2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின்படி 180 நாட்கள்) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய அறிக்கைகள் 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை அங்கீகாரம் பெறுவதற்காக அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டிற்கான இறுதி கணக்குகளுக்கு அனுமதி பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, அந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |